**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 327/2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகசுந்தரம் | தொழில் | : | தனியார் பள்ளி ஆசிரியர் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பள்ளி ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கீழப்பாவூரில் வைத்து நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.10.2020ம் தேதி, காலை 06.00 மணிக்கு காந்திமதியின் தென்னந்தோப்பின் அருகில் வைத்து

போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், காந்திமதி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.16 10:40:53 +0530